✝

திரியேக நம:

சாக்ஷாத் ஜேசுநாயக ஸ்வாமியின்

திருமாதாவாகிய

அர்ச். அமலோற்பவ மரிய நாயகியின்

திருவடி பூஜிதமெனும்

பக்திரச மதுர கானம்.

இஃது

கொடைக்கானல் (வரகவி) ஸ்ரீலஸ்ரீ

ஆசீர் ஜான் A. துரைராஜன்

வர்களியற்றியது.

தன் விலை அணா **3.**

1932. Reserved.

13 AUG 1932

Q6:417
N32
85327

திரியேக நம:

சாக்ஷாத் ஜேசு நாயக ஸ்வாமியின்

திருமாதாவாகிய

அர்ச். அமலோற்பவ மரிய நாயகியின்

திருவடி பூஜிதமெனும்

பக்திரச மதுர கானம்.

இஃது

கொடைக்கானல் (வரகவி) ஸ்ரீலஸ்ரீ

ஆசீர்ஜாண் A. துரைராஜன்

அவர்களியற்றியது.

இதன் விலை அணா 3.

Copy Right 1932. Reserved.

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	வெண்பா.	5
2.	தாவீது குலமரபெழு.	,,
3.	மாதர்க் குள்ளேதிரு.	6
4.	கைவிடாதருள்.	7
5.	கதியிலேக் கிருபாகரி.	8
6.	தாய்மரி த்யானம்.	,,
7.	பனிமய ரூபி.	9
8.	மோக்ஷராக்கினியே.	10
9.	துணை நீ துணை நீ.	11
10.	வாருங்கள் வாருங்கள்.	12
11.	அன்னையே மரி.	14
12.	கட்டளைக் கலித்துறை.	15
13.	மரிய தாயை நீமனமே.	,,
14	கலி நிலைத் துறை.	16
15.	ஞானபூஷணியே.	,,
16.	மாமரியே மலர்க்காவனமே.	17
17.	காவா மாமரியே.	18

26.417
N32

முன்மொழி.

சர்வவல்ல தேவனும், லோகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டியுமாகிய சாக்ஷாத் ஜேசுநாயக ஸ்வாமியை மகவாய்ப் பெற்றெடுத்த பாக்யவதியும், மூலோகவரசியுமாகிய அர்ச்: மரிய நாயகியை பணச் செருக்காலும், உத்தியோகக் கிருக்காலும், நிறைந்தவரே யன்றி, மற்றெவரும் வந்தியாதிரார். யானோ புராட்டஸ்டாண்டு கிறிஸ்தவனெனினும், அத்திரு நாயகியின் பால் நம்பிக்கை வைத்து, என்சிற்றறிவிற் கெட்டியவாறு அந் நாயகியின் மகிமைப்ரதாபங்களைப் புகழ்ந்து பாடவும், என் குறைகளை அத்திரு மாதாவிடம் எடுத்தோத முன் வந்ததும் அவளது கிருபாகடாக்ஷமே யன்றி மற்றேதுமல்ல. அற்பனும் அறிவிலியுமாகிய என்னை, வானதூதர்கள் வாழ்த்தி வணங்கும் அமலோற்பவமாகியத் தன்னைப் பாடிப் புகழத் திருவுளங் கொண்ட தேவதாயின் திருவடிக்கு என்றும் மகிமையுண்டாக. இக்கீர்த்தனங்களை தேவாலயங்களிலும், உற்சவநாட்களிலும், பஜனைக்கூடங்களிலும் மற்றுமிதர வேளைகளிலும் கிறிஸ்தவர்களனைவரும் மேலும், சங்கீதாபிமான, தமிழாபிமான இதர மதஸ்தர்களனைவரும் பாடி தேவதாயின் திருவருளைப் பெறுவதற்காகவே, தற்காலப் புதிய வர்ண மெட்டுக்களில் இக்கீர்த்தனங்களை அமைத்திருக்கிறேன். குற்றங்கள் பல விருப்பினும் அவைகளை மன்னிக்கும்படியாகப் பெரியோரை மிகவும் பிரார்த்திக்கிறேன். இப் புத்தகம் அளவில் குறைவுபட்டிருப்பதால் வருந்துகிறேனெனினும், இதன் இரண்டாம் பாகம் பெரிதாக்கப்படுமென்று நம்புகிறேன்.

சகலரும் இக்கீர்த்தனைகளைப் படித்து, தேவ தாயாகிய அர்ச்: மரிய நாயகியின் திருவருள் பெறுவார்க ளென்று நம்புகிறேன்.

இக் கீர்த்தனங்களை வெளியிடுவதற்கு வேண்டிய உதவி செய்த சகல கனதனவான்களுக்கும் விசேஷமாக எனது நண்பர்கள் J. ஐசக் என்பாருக்கும் கனம் M. பெரியதம்பி அவர்களுக்கும் A. R. பழனி அவர்களுக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். தேவதாய் துணை செய்வாளாக. ஆமென்

இங்ஙனம்,

(வரகவி) ஆசிர். J. அப்பாதுரைராஜன்,

கோடைக்கானல்.

திரியேக நம:

சாக்ஷாத் ஜேசுநாயக ஸ்வாமியின்
திருமாதாவாகிய
அர்ச்: அமலோற்பவ மரியநாயகியின்

திருவடி பூஜிதமெனும்

பக்திரச மதுர கானம்.

தேவதாய் ஸ்துதி.

வெண்பா.

ஆதித் தனையுடை யாயணிந் தம்புலியின்
மீதிரு காலூன்றி மேலுஞ்செஞ்—சோதிமய
மாய் நிற்குந் தூய மரியே வுனைப்பாடுஞ்
சேய் முனம் வந்தருள் செய்.

"மாமணி மாகதம்" என்ற வர்ண மெட்டு.

பல்லவி.

தாவீது குலமாபெழு
தனைநிகர் மகராசி
தாளிணை துணையே.

அநுபல்லவி.

பாவிசைத் தேதினமும்
பாவலர் கொண் டாடும்

பைந்தாம ரைவதனி
பனிமய வடிவான (தா)

பாட்டு—அ. ப எடுப்பு.

சூசைம காமுனிக்குத்
தூந்திகட் துணையான
சோபனி வித்வதுரை
ராஜனுக்கு தாரி (தா)

"மாற்றுரையாத" என்ற தேவார மெட்டு.

(1) மாதர்க் குள்ளேதிரு வரமிகு த்தவளே
வானோர்க ளுதனைத் தான்பயின் றவளே
தூதனுங் காபரி யேல் வாழ்த்து பவளே
துரை ராஜ கவிக் கருள் புரிவாயாண் டவளே (மா)

(2) பாவியெந் தேகமோ பாழுமண் கூடு
பகரப் பகரயிது மா வெட்கக் கேடு
ஆவி பிரிந்த பின் போஞ்சுடு காடு
ஆகையால் வாது செய் யாதேயென் ஞேடு (மா)

(3) சண்டாளன் நான் மறந் தாலும் மண்மீது
தஞ்ச மெந்தனுக் கேது வஞ்சம் வையாது
எண்டிசைக் காசியே எனைக்கைவிடாது
ஈடேற்றி யருள்தர வேணுமிப் போது (மா)

(4) அன்றுலூர்த் தெனுங்கிரிக் கருகிலோ ரிளமை
அணங்கெதிர் தோன்றின அம்மாநின் னடிமைக்
கின்றெதிர் தோன்றினல் தீருமென் வறுமை
எந்நாளும் நான்மரி யன்னையுன் னுடமை (மா)

"ஆலவாய் மதுராபுரி" என்ற வர்ண மெட்டு.

பல்லவி.

கைவிடாதருள் தந்து சேயனைக்
காமரியன்னை யேசு தா—
காமரியன்னை யேசு தா—கன்னி
காமரி யன்னை யேசு தா— (கை)

தொகையறு.

வைகறை யெழுநவ தாரகை யென்றுனை
மறை யோர்பு கழ்வரன்றோ
செய்பிழை பல கோடி யாயினுந் தாய்மறந்
திடுஞ் சேயும் பாரிலுண்டோ (கை)

(பாட்டு பல்லவி எடுப்பு)

ஆசீர்வா தகு லாதிபன் துரை
ராஜனுக்கனு கூலியே
ராஜனுக்கனு கூலியே—துரை
ராஜனுக்கனு கூலியே— (கை)

"தினகர குல தேவதியே" என்றமெட்டு

பல்லவி.

கதியிலைக் கிருபா கரி யே
க்ா வாமா மரியே— (க)

அநுபல்லவி.

மதிமிளிர் உனதிரு
மலராடி துணேயே
வரங்கொடுத் தெனையா தரியே (க)

தொகையறு.

வான்பூச ராசர மனைத்தயு மேநிறு
வாமுன்ன நாதியான
மாதேவ னுற்றெறிந் தருள்பெற்ற தாயுனை
வணங்கினே னேழை நானே (கதி)
(பாட்டு, அ-ப-எடுப்பு)
அருட்கவி ஸ்ரீ துரை
ராஜனுக் கினிதாய்
ஆசீர் வாதந் தாதா— (கதி)

"சாந்தமு லேகா" என்ற வர்ணமெட்டு.

இராகம் சாமா தாளம் ஆதி.

பல்லவி

தாய்மரித் யானந்
தான்பிர தானம்
சர்வபாவநி வாரணம்—மெஞ்ஞானத் (தா)

7A
9-51

அநுபல்லவி.

காய்தல கற்றி நன்கு
ஆய்ந்தறிந் தால் தெரியும் (தா)

சரணம்.

(1) வாய்திறந் தழுஞ்சிசு
வல்லவோ பால் குடிக்கும்
வணங்காற் கெவ்விதம் தேவ
மாதா வருள் கிடைக்கும்
பேய்ச்சுரை காய்த்து மென்ன
காயாதிருந்து மென்ன (தா)

(2) ஆதுலர்க் காதரவாம்
அந்தகர்க் கோவிளியாம்
அடியார்க் கடியவ ளாம்
அருணீர் கொடுப்பவளாம்
ஸ்ரீ துரை ராஜ கவி
சிந்தை யணிபவளாம். (தா)

"தினமணி வம்ச" என்ற வர்ணமெட்டு.

இராகம் அரிகாம்போதி—தாளம் ரூபகம்.

பல்லவி.

பணி மய ரூபி
பரமர் கொண்டாடும்
பாக்ய மா மரியே (ப)

அநுபல்லவி.

இனிவிடு வேனோ வுன்னை
எனதருமைத் தாயே நீ
எனைக் கைவிடா துன்னருள்
ஈவாய்த யாபரியே

சரணம்.

கண்கண்ட தெய்வ மென்றுக்
காசினி யோர்க ளெல்லாம்
கரங்குவித் துஞ்சரணக்
கமலம் கும்பிடல் கண்டு
துன்பவினை நிறைந்து
துரைராஜ கவியுந்தன்
துணை நாடி வந்தேனருள்
தனைத்தாகிர் பாகரியே (ப)

"மோக்ஷமு கலதா" என்ற வர்ணமெட்டு.

இராகம்-சாமா தாளம்-ஆதி.

பல்லவி.

மோக்ஷராக் கினியே
பவியாம் ஏழை
முன் வந்து காரம்மணி (மோ)

அநுபல்லவி.

மாக்ஷி சேர்ஸ்ரீ மாமரி யாயே
வந்தாள வேணும் மைந்த னெனை (மோ)

சரணம்.

மாதா நீயல் லாதிப் பூவில்
மற்றோர்தஞ்ச மற்றுன் கஞ்ச
பாதம் நாடி பக்தனு மாசீர்
வாததுரை ராஜன் வந்தேன் (மோ)

"கதர்கப்பல்" என்ற வர்ணமெட்டு.

இராகம் பரசு—தாளம்-ஆதி.

பல்லவி.

துணை நீ துணை நீ மரியே—வித்வ
துரை ராஜ வாரணியே
நிறை ஞான பூரணியே (து)

அநுபல்லவி

வினையாம் பவக் கடலில்
வீழ்ந்தகம் வாடுவோரை
அனையே! ஜீவகரை சேர்ப்
பாருனை யன்றி யுண்டோ? (து)

சரணம்

பாவநி வாரணனைப்
பயின்றப ராபரியே

பரலோகத் தவர்துதி
பரவுத யாபரியே
பாது காராய்—எனைப்
பாது காராய்—இப்
பாரிலா தாரமில்லை
பாலன் கவலை தீராய் (து)

“கோறுங்கள் கோறுங்கள்” என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

வாருங்கள் வாருங்கள் வாருங்களே—தேவ
மாமரி தாள் முனம் வாருங்களே (வா)

அநுபல்லவி.

ஆசில் துரை ராஜ தமிட்
பாசுரங்கள் பாடித் தினம்

சரணம்.

1.

கூருந்தவித்திறை கோத்திர சீலி
கோதறு மாதவத் தோர்புகழ் நூலி
பாருல கோர்க்குப காரவி சாலி
பனிரண்டுடுக் களைச்சென்னியி
லணிபூரணக் கனிகாமுனம் (வா)

2.

பூர்வ முதல் வேத புத்தகம். போற்றும்
பூரணி யேயென வேதியர் சாற்றும்
சீர்மிகு தாயிணைத் தாளைக்கொண் டேற்றும்
ஜெகத் தவர்க் கேது குறை
அகத் துயர் யாவு மற— (வா)

3.

இத்திரு மாதிலே யேலிகத் தோர்க்கு
எதிரக்ஷ ண்யம்? மூவுல கோர்க்கு
உத்தம தாயிவ ளேயென்ற பேர்க்கு
உதிக்கும் மெஞ் ஞானம்பர
கதிக்கொளி யானவள் முன் (வா)

4.

கர்த்தனைத் தாங்கும்ம கத்துவ கரத்தி
கற்பதருவெனு மற்புத வாத்தி
நித்திய கன்னிகை யானவம் பரத்தி
நினைக்குமுன் வந்துதவி
தனைத்தரும் ராக்கினி முன் (வா)

5.

ஆதித்தனையுடை யாகவ ணிந்து
அம்புலி யையமிதித் தெங்கும்நி றைந்து
கோதில திசயத் தாலேசி றந்து
குணமணி யெனப் பலகிரிகளில்
நனி திகழ்திரு வனைமரி முனம் (வா)

6.

தீராப் பிணிவினை யாவுமே யோட்டி
செய்யவான் பூவிற் கிவள்வழி காட்டி
ஆராதனைக் குறித் தானசீ மாட்டி
ஆசீர் குலத் துபகாரியின்
மாசிற்சர ணம்புஜ முன் (வா)

ரகுவம் சுதா—என்ற வர்ணமெட்டு.

இராகம் கதனகுதூகலம் தாளம் ஆதி.

பல்லவி.

அன்னையே மரி
யாயே ஆதரி
ஆசீர் துரை ராஜன்
பூஜிக்கும் மாசில் (அ)

அநுபல்லவி

எண்ணிலா நன்மை
இகத்தோர்க் கருளும்
புண்ணி யோத்த மியே
பூசுரர் கொண் டாடும் (அ)

சரணம்

நெஞ்சம் நொந்து நானே
உஞ்ச ரணந் தானே

கெஞ்சியழு தேனே
தஞ்சமருள் நீனே
வஞ்ச மேனம்மா
வல்லதேவன் தாயே
வாது செய்தி டாது
பாது காரிப் போது (அ)

கட்டளைக் கலித்துறை.

சிந்தா குலமிகுத் தம்மாக பாடந் திறமினென
வந்தாவி நொந்து மயங்குமெங் கோல மதையறிந்து
மைந்தாவென் றென்னைத் தழுவியாட் கொண்ட மரியனையுன்
செந்தா ளிணைக்கென் புரிவேன் கை மாறு தெரிகிலனே

"நிருபமான சாமி" என்ற வர்ணமெட்டு.

இராகம் பியாகு தாளம்-ரூபகம்.

பல்லவி.

மரிய தாயை நீ மனமே
வணங்குவாய் அநு தினமே (ம)

அநுபல்லவி.

பரிசுத் தாவி யால்நிறைந்தருள்
பகவன் ஜேசு தனைப்ப யின்றமா (ம)

சரணம்.

அன்னை யென்றவர் தன்னைச் சேயென
ஆதரிக் குந்த யாபரியாம்
அன்ப னாசிர் வாத குமர
அருள் மொழிதுரை ராஜன் போற்றுப் (ம)

கலி நிலைத்துறை.

மறைய வர்க்கனை யேதிரி யேகனின் மாண
புரையி லற்புத சற்குணத் தாயுனைப் போன்ற
நிறைம கத்துவ யாதரு மேதருள் ஞான
கரையிற் சாகர மேதகி வந்தெனைக் காவா

"சோமசுந்திரனே" என்ற வர்ணமெட்டு.

இராகம் அமீர்கல்யாணி தாளம் ரூபகம்.

பல்லவி.

ஞானபூ ஷணியே— எங்
நாளு மாளு
வாயம் மணியே— (ஞா)

சரணம்.

1. ஈனவடிமைத் தனத்தைப் போக்கி
என்று முந்தனுக் கேதொழும் பாக்கி
தீன னென்மனக் கவலை நீக்கி

செல்வமித் தரு வாயே
நல்குமா மரி யா யே— (ஞா)

2. உனைநிகர்த்த தேவ மங்கை
உலகி லேது ஜீவ கங்கை
தனையு டைத்த தூய செங்கைத்
தா மரை யா லருள்
தாம றை யோர் புகழ்— (ஞா)

3. மறைசதுர் புகழ் ஜேசுவின் பக்தி
வைக்கத் தாவெனக் காத்தும சுத்தி
துரை ராஜனுக் கோயபி விர்த்தி
தூநல மனைத் திலும்
தாஇக பரத் திலும் (ஞா)

"சிதம்பரம் போகாமல்" என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்

1. மாமரி யேமலர்க் காவனமே—நின்
மைந்தனுக் கும்பத தரிசனமே
தாமகிழ்வாயிது வேதினமே
சாற்றரு மாதவப் பனிமயமே— (மா)

2. எந்தவா றுன்னரு மந்தகு மார
னேசுவைத் தேடினை யோயிது நேர
மந்தவா றெந்தனை நாடிவி சார
மனைத்தையுந் தீர்த்தெனை யாள்வதுன் பாரம் (மா)

3. நேமிக்கு ளன்பர்கள் நினைக்குமுன் வருவாய்
நினைத்தவை கள்குறையா தனைத்தையுந் திருவாய்

தாமிக்க வேதிறந் துளமகிழ்ந் தருள்வாய்
துரைராஜ கவிவலத் துணையாய்நின் றிடுவாய் (மா)

"கந்தா காருண்யனே" என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

கா வா மா மரியே
கருணை கரியே
தேவ தேவ தாயே
திரு பூரணி யே

அநுபல்லவி

சீதபொற்றிருப் பாதபங்கயத்
தாதர வெனக் கீகுவாய்— (க)

தொகையரு.

பொல்லாத பிள்ளையானு னுலு மன்னை நீ
புறக் கணிப் பது தர்மமோ
கல்லாத பாவியென் றெனைத்தள்ளி நின்கடைக்
கணியாதி ருத்தல் நலமோ? (கா)

(பாட்டு பல்லவி எடுப்பு)

நம்பி னே னுனையே—துரை
ராஜ கவி
அன்பு வைத் தெனையே—தினம்
ஆண்டிடு வாய் (கா)

(முதற்பாகம் முற்றிற்று.)

இதன் இரண்டாம் பாகம் சீக்கிரம் வெளியாகும்.

அறிவிப்பு.

இதனால் சகல அச்சாபீஸ் தலைவர்களுக்கும், மற்றும் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்வதென்னவென்றால்:—

இக்கீர்த்தனங்களையாவது, அதன் பாகங்களையாவது, என் அனுமதியின்றி, அச்சிடுவார்களேயானால், யான் கோரும் நஷ்டத்திற்கும், சட்டப்படி குற்றத்திற்குள்ளுமாவார்களென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆசீர் **J. A.** துரைராஜ கவி.

இப்புத்தகங்கள் கிடைக்குமிடங்கள்.

Mr. B. K. ஜேசுதாசன்,
மாடசாமியாபுரம்,
தூத்துக்குடி.

Mr. J. ஐசக்,
அந்தோனியார் கோவில்தெரு,
கோடைக்கானல்.

ஸ்ரீ ஆசீர்ஜாண் **A.** துரைராஜனவர்கள்
"பிளிஸ் வில்லா"
கோடைக்கானல்.

ராஜா பிரஸ், மதுரை:—32.